# கம்பராமாயணத்தில்ஊனமுற்றோர்நிலை - ஒருஉளவியல்பார்வை

## Disability Status in Kambaramayanam – A Psychological Perspective

- **முனைவர். வே. மிருணாளினி,துணைபேராசிரியர்**(SG), **சிறப்புகல்வித்துறை**,
**அவினாசிலிங்கம்மகளிர்மனையியல்மற்றும்உயர்கல்விநிறுவனம்**, **கோயம்புத்தூர்** – 641 043, **தமிழ்நாடு**, **இந்தியா**.
**Dr. V. Mrunalini,** Assistant Professor(SG), Department of Special Education, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore – 641043, Tamil Nadu, India.
ORCiD:https://orcid.org/0000-0002-2194-5957

**ABSTRACT**
Women with disabilities are usually doubly discriminated. The women with disabilities shall enjoy good social lives if and only if the society is sensitive towards the abilities and the limitations of them and empowered enough to support and provide equal opportunities. This article explores the social lives of the women with disabilities in the Kambaramayanam with a psychological outlook. This observation enables us to view the society of the ancient times. The author has portrayed the psychological trauma underwent by disabled women characters of Kambaramayanam and justifies that the reactions would have been better, provided the society around them treated them with due respect. In the conclusion, the author has given the examples of positive deeds of disabled characters from other literature sources due to goodwill and love shared by the community around them.

**Keywords:** Epic, Kambaramayanam, Mandarai, Soorpanakai, Tamil Literature

### முன்னுரை

அரிதரிதுமானிடர்ஆதல்அரிது
மானிடர்ஆயினும்கூன்குருடுசெவிடு
பேடுநீங்கிப்பிறத்தல்அரிது
- ஔவையார்

இன்று நாம்ஊனமுற்றோரின் உரிமைகளை நிலை நாட்டும் சமூகமாக இருப்பதன் அவசியத்தை அறை கூவிக் கொண்டிருக்கிறோம். ஒரு ஊனமுற்ற மனிதனின் சமூக வாழ்வு என்பது அவனது சுற்றம், அரசு மற்றும் சமூக நிலைப்பாடுகளின் வழி செப்பனிடப்படுகிறது. ஊனமுற்ற கதாபாத்திரங்கள் கம்பராமாயணத்தில் எவ்வாறு கையாளப் பெற்றுள்ளது என ஓர் ஆராய்ச்சியாளரின் பார்வையோடு நோக்குங்கால் பல உண்மைகள் தெளிவாகின்றன கதை மாந்தர் சிலரின் சித்தரிப்பு அக்கால சமூகத்தின் கண்ணாடியாக விளங்குகிறது.

### மந்தரை

மந்தரைஎன்பவள்தன்னுடையசெல்லப்பெண்ணாகவேகைகேயியைக்கருதியவள்.

செவிலித்தாயாகஇருந்துகைகேயியைவளர்த்தவள்.

கைகேயிபிறந்தகேகையநாட்டிலிருந்துஅவளுடனேயேபயணிப்பவள்தன்னுடையமகளாக நினைக்கும்கைகேயியின்மகன்அரசாளவேண்டும்என்றுமந்தரைநினைப்பதில்என்னதவறு

இருக்கமுடியும்? இப்படிநினைப்பது மந்தரையின்நேரானஎண்ணம்தானே! அயோத்தியில்சிறுவனாகஇருக்கும்ராமனால்களிமண்உருண்டைதாங்கியஅம்பால்தாக்கப் படுகிறாள். அவளுடையஉடல்ஊனம்பலரால்அவமானப்படுத்தப்படுகிறது. இத்தனைஅவமானங்களால்ஒருவருக்குகோபம்வருவதுஇயல்புதானே? ஆனால்தனக்குநேர்ந்தஅவமானங்களுக்காகஅவள்ராமனைபழிவாங்கினாள்என்றுநினைப் பதைவிட,
தான்வளர்த்தமகளின்மகனுக்காககைகேயியைதூண்டிவிட்டாள்என்பதேபொருத்தமாகஇ ருக்கும்.

**கம்பர்இயற்றியகம்பராமாயணம்**

**அயோத்தியகாண்டம் - 2. மந்தரைசூழ்ச்சிப்படலம்**

**ஆழ்ந்தபேரன்பினாள்அனையகூறலும்,**
**சூழ்ந்ததீவினைநிகர்கூனிசொல்லுவாள்,**
**'வீழ்ந்ததுநின்னிலம்; திருவும்வீழ்ந்தது;**
**வாழ்ந்தனள்கோசலை, மதியினால்' என்றாள். 56**
**ஆடவர்நகையுற, ஆண்மைமாசுஉற,**
**தாடகைஎனும்பெயர்த்தையலாள்பட,**
**கோடியவரிசிலைஇராமன்கோமுடி,**
**சூடுவன்நாளை; வாழ்வுஇது' எனச்சொல்லினாள். 58**
**கோபம்கொண்டமந்தரைமாலையைஎறிந்துகூறுதல்**

**தெழித்தனள்; உரப்பினள்; சிறுகண்தீயுக**
**விழித்தனள்; வைதனள்; வெய்துஉயிர்த்தனள்;**
**அழித்தனள்; அழுதனள்; அம்பொன்மாலையால்**
**குழித்தனள்நிலத்தை-அக்கொடியகூனியே. 61**

கம்பர்கூனி என்றும் "கொடிய" என்னும் அடைமொழி கொண்டு மந்தரையை விளிக்கிறார். கடவுளின் அவதாரமாகவே கருதப்படும் ராமனே கூனியின் மீது மண் உருண்டை எறிந்துஎள்ளிநாகையாடுவதாகக் கூறுகிறார். குழந்தைகள் பெற்றோர் உற்றோரின்

கண்ணாடியே அவர்தம் செயலுக்கு பொறுப்பேற்க வேண்டியர் அவர்தம் பெற்றோரே. ஒரு அரசிளங் குமாரனேஇவ்விதம் ஒருஎள்ளலில் ஈடுபடுவது அச்சமூகத்தில் அன்றைய ஊனமுற்றோரின் நிலயினையே எடுத்துரைக்கிறது.

தன் பேரக் குழந்தையே தனது ஊனத்தைஎள்ளிநகையாடுங்கால் மந்தரையின் தன்மானம், அடிபடுகிறது. பழிவெறியைத் தூண்டுகிறது. கழிவிரக்கம் மேலிடுகிறது. "தேராமன்னா செப்புவது உடையேன்" என கண்ணகிக்கு அளிக்கப்பட்டசந்தர்ப்பம் மந்தரைக்கு தரப்படவில்லை.அவளை ஆற்றுவாரோ தேற்றுவாரோ இன்றி இத்தகு புண்கள் வடுவாகி அவளது இதயம் கடினமடைகிறது.

எத்தகுஇடர்வரினும் உற்றோர் நின்று ஆற்றுபடுத்துங்கால்; தோள்சாய தகுந்த உறுதுணை மனிதர் இருக்குங்கால் அவ்விடர்கள் களையப்படுவது உறுதி. அத்தகு தோள்கள் மந்தரைக்கு இன்மையே அவளது விழுப்புண்கள் கடினமுற்று அவளை உண்மையானகூனியாக, நாட்டின் நலம் குறித்த அக்கறை கிஞ்சித்தும் அற்றவளாக மாற்றியது.

பொன்மாலை பரிசில் பெறுங்கால் மகிழாது அப்பொன்மலையால் நிலத்தையே குழிக்கும்வன்மம் ஏன் பெருகியது என்பதுஆராய்ச்சிக்குரிய வினாஆகும். இவ்வினாவின் விடை மிகவும் எளிதாக ‘கைப்புண்ணுக்கு கண்ணாடியா’ எனும் விதமாக உணர தக்கது அத்தகு "அன்பில்லாச் சூழல் என்பிலே குத்தியது" என்பதே நாம் காணும் உண்மை.

கைகேயி அரசி அவளது செவிலித்தாய் மந்தரை அரண்மணைவாசி. அவளுக்கே இந்த நிலை என்கையில் சாமன்யரின் நிலை எப்படி இருந்திருக்கும் என கற்பனை செய்யவும் ulam அஞ்சுகிறது.

இவ்வாறு ஒரு ஊனமுற்றவளைச் செய்தஎள்ளல் ராமனைக் காட்டிற்கு துரத்தியது. அங்கும் வாளாலிருக்காமல்ஒரு விபரீதத்தை இழுத்து சூர்ப்பனகையை மூக்கறுத்துஊனமுறச் செய்து ராம ராவணயுத்ததிற்கும் லங்காபகிஷ்கரிப்பிற்கும் சீதையின் தீக்குளித்தலுக்குமே வித்திடுகின்றனர்

**சூர்ப்பனகை**

சூர்ப்பனகை ஒரு அழகான மங்கை என்பது பல இடங்களில் மறைக்கப்படுகிற ஒரு நிகழ்வுபொதுவாக அவள் அழகில்லாத .

பெண்ணாகவே இராமாயணத்தில் சித்தரிக்கப்படுகிறாள்அவள் எத்தகைய அழகு மங்கை . .என்பதை கம்பன் இராமன் வாயிலாகவே வெளிப்படுத்துகிறார்செங் கயல்போல் கரு நெடுங் கண், தே மரு தாமரை உறையும்

நங்கை இவர் என நெருநல் நடந்தவரோ நாம்? என்ன, -(கம்பராமாயணம் ஆரணிய காண்டம் பாடல்:117)

பிறக்கும்போதே அவள் தன் தாய் கேகசி மற்றும் பாட்டி தாடகை ஆகியவர்களையும் அழகில் விஞ்சியிருந்தாள். அவள் கண்களின் அழகை முன்னிட்டு மீனாட்சி என்றும் அழைக்கப்பட்டாள்.

சூர்ப்பனகைக்குஅவளுடையஅண்ணன்ராவணனால்வழங்கப்பட்டவனத்தைஆக்கிரமித்து பர்ணசாலைஅமைத்திருப்பவர்கள்யார்என்றகேள்வியோடுதான்அவள்வருகிறாள். அவள்அரக்கியாகஇருந்தாலும்பெண்தானே. அவளுக்குஇயல்பாகராமன், லட்சுமணனிடம்தோன்றும்காதல்எள்ளிநகையாடப்படுகிறது.

அவளின்தோற்றத்தை, `உருவம்கண்டுஎள்ளாமைவேண்டும்' என்னும்முதுமொழியைமறந்து, மூக்கறுபட்டுஅவமானப்படுத்தப்படுகிறாள். அதற்கானவினைராமன், லட்சுமணனுக்குவந்துசேர்கிறது.

இலக்குவன் சூர்ப்பணகையின் உறுப்பு அறுத்தல்

**'நில் அடீஇ' என, கடுகினன், பெண் என நினைத்தான்;**
**வில் எடாது, அவள் வயங்கு எரி ஆம் என விரிந்த**
**சில் வல் ஓதியைச் செங் கையில் திருகுறப் பற்றி,**
**ஒல்லை ஈர்த்து, உதைத்து, ஒளி கிளர் சுற்று-வாள் உருவி, 93**

**'ஊக்கித் தாங்கி, விண் படர்வென்' என்று உருத்து எழுவாளை,**
**நூக்கி, நொய்தினில் 'வெய்து இழையேல்' என நுவலா,**
**மூக்கும், காதும், வெம் முரண் முலைக் கண்களும், முறையால்**
**போக்கி, போக்கிய சினத்தொடும், புரி குழல் விட்டான். 94**

**ஏற்ற நெடுங் கொடி மூக்கும், இரு காதும், முலை இரண்டும், இழந்தும், வாழ**

**ஆற்றுவனே? வஞ்சனையால், உமை உள்ள பரிசு அறிவான் அமைந்தது அன்றோ?**

**காற்றினிலும் கனலினிலும் கடியானை, கொடியானை, கரனை, உங்கள்**

**கூற்றுவனை, இப்பொழுதே கொணர்கின்றேன்' என்று, சலம்கொண்டு போனாள் .143**

அழகிய இராமனைக் கண்ணுற்றங்கால் காதல் வயப்படுவது இயற்கையே. இராமன்அத்தகு கவர்ச்சி உடையவனே. எக்காலத்திலும் ஒரு தலை காதலானது கீழாகவே பார்க்கப்படுகிறது.

'மாறிப்புக்கு இதயம் எய்துவது' எஞ்ஞான்றும்சாத்தியமன்று. காதலோ காமமோ, கவர்ச்சியோ எதுவாகிலும் சமூக வழிமுறைகளால் பதப்படுத்தப்பட்டு ஒழுங்கு வரைமுறைகளுக்கு உட்பட்டு இருத்தல் நியாயமே. ஆனால் அந்த இயற்க்கை உணர்ச்சியை சரியாக கையாள தெரியாமல் வினையை, விபரீதத்தை எதிர்கொண்டு அழைத்தனர் ராம லட்சுமணர்கள்.அறுபட்ட மூக்குடன் சூர்ப்பனகை சந்தித்த அவமானங்களை எண்ணிப்பார்க்க தவறிவிட்டனர் இவ்விடத்தில் கம்பரின் உவமையையே எடுத்தாள விழைகிறேன்.

"கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போலே" நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருந்த சூர்ப்பனகை ஊனமுறுங்கால் பெரியதொரு விபரீதத்தை சமுதாயமே சந்திக்கும் வண்ணம் பெரும்போர், இழப்பு லங்கா தகனம் ஆகிய விளைவுகளால் பொது மக்கள் அவதியுறுகின்றனர்.சூர்ப்பனகை அரக்கி என்பதனையும் தாண்டி ஒரு பெண் என்பதனையும், அவளது அறுபட்ட மூக்கு அவமானச் சின்னமாகும் என்பதனையும் சிந்திக்க தவறிவிட்டனர்.

இங்கு நாம் ராமனின் செயல்களை விமர்சனம் செய புகவில்லை ஊனமுற்றோரின் மனநிலை குறித்தே ஆராய்ச்சி செய்கிறோம். ஒரு துவேஷம் பழிவாங்கும் உணர்ச்சி குரூரத்தன்மை ஆகிய தீய எண்ணங்களை உருவாக்கும் சூழலே ஊனமுற்றோரைச் சுற்றி இருந்துள்ளது. அவர்களது மனகாயங்களுக்கு மருந்திட்டு ஆற்றுவாரற்று அத்தீய எண்ணங்கள் சமூக விபரீதங்களுக்கு வழி செய்வனவாகவே அமைகின்றன.

தசரதன் கூட கண்பார்வையற்ற பெற்றோரைக் காப்பாற்றும் முகத்தான் நீர் மொண்டு வரும் வழியில் சப்த விவரணங்களை தவறாகபுரிந்து கொண்டு மிருகமென நினைத்து

அடித்துவிடும் இளைஞனின் பெற்றோர் சாபத்தால் மகனை பிரிந்து துயருற்று சாகும்படி சாபம் ஏற்றான்

**முடிவுரை**

காந்தாரி மகாபாரதக் கதையில் வரும் ஒரு வரலாற்று மாந்தர் ஆவார் நீதி தேவதையாக இன்று அனைவராலும் போற்றப்படும் நீதிமன்ற தெய்வம் காந்தாரி குருவம்சத்தைசேர்ந்ததிருதராஷ்டிரனைமணந்துகொண்டார்திருதராஷ்டிரன் பிறவிக்குருடர் ஆகையால்பதிபக்தியின்காரணமாககாந்தாரியின்தனதுகண்களைகட்டிக்கொண்டுவாழ்ந்தார்.

இவரதுஉயர்ந்தபதிப்பக்தியின்காரணமாகஇவர்பலசக்திகள்பெற்றுஇருந்தார்.தனதுமகன்கள்அழியகாரணமாகஇருந்தகிருஷ்ணனைஇவர்கிருஷ்ணனின்குலம்அழியசபித்தார். இதுவேகிருஷ்ணரின்யாதவவம்சத்தில்அறிவுக்குகாரணமாகஅமைந்ததுகடவுள்அமைத்தது வாரகைசாம்ராஜ்யத்தைதனதுசக்திபெற்றசாபத்தால்கடலுக்குமூழ்கடித்துகடவுளிடமேநீதி கேட்டநீதிதேவதைஇவளைத்தான்நீதிதேவதைஆகவடிவமைத்துகையில்தராசுடன்உருவாக்கினார்கள்உச்சநீதிமன்றமுத்திரைவாக்கியமானதர்மம்எங்குஉள்ளதுஅங்குவெற்றிநிச்சயம்எனகாந்தாரிமகாபாரதத்தில்கூறினார்இன்றுநீதிதேவதையாகஅனைத்துநீதிமன்றத்திற்கும்வழிகாட்டியாகநீதிதெய்வமாகஉள்ளார்

பொற்கைபாண்டியன்கூண்பாண்டியன்போன்றசிறந்தஆளுமைகளும்தமிழ்இலக்கியவரலாற்றில்நன்முத்திரைபதித்துள்ளார். ' முற்பகல்செய்யின்பிற்பகல்விளையும் ' எனும்கூற்றுகேற்பநாம்விதைக்கும்நன்மைகள்அனுசரணையானபேச்சுக்கள்அரவணைப்பானதோரணைகள், பாசவெளிப்பாடுகள், காயத்திற்கானமருந்துகள்நம்சமூகநன்மைக்குவித்தாகநல்லதொருசமூகம்காணமாண்புமிகு மக்கள் வாழ அனைவரும் சேர்ந்து வாழும் சமதர்ம சமுதாயம் காண வழிவகுக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

குறிப்பு:

[1] https://www.chennailibrary.com/kambar/aaraniya/soorppanagaippadalam.html

[2] மோரணம்புலவர்சி. திருநாவுக்கரசு. "ஸ்ரீமத்கம்பராமாயணம்." மார்ச் 2011. சென்னை: நர்மதாபதிப்பகம்.

[3]திவ்யாராணி. "ஊனமுற்றவர்களின்இலக்கியப்பிரதிநிதித்துவங்கள்: இந்தியபுராணங்களின்ஒருவழக்குஆய்வு."

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

கண்டுபிடிப்புகள்மற்றும்ஆராய்ச்சிபகுப்பாய்வுபன்னாட்டுஆய்விதழ். தொகுதி 02, எண் 03(II), ஜுலை-செப்டம்பர் 2022, பக். 108-111.

## REFERENCES

1) https://www.chennailibrary.com/kambar/aaraniya/soorppanagaippadalam.html
2) MoranamPulavar C. Thirunavukarsu. "*SrimadhKambaRamayanam.*"March 2011.Chennai: NarmadhaPathipagam.
3) Divya Rani. "Literary Representations of Disabilities: A Case Study of Indian Mythology." *International Journal of Innovations & Research Analysis (IJIRA).* Vol. 02, No. 03(II), July-September 2022, pp. 108-111.